# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.97/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : குப்பாயி | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 18st நவம்பர் 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சாவடிப்பாளையம் புதுாரில் குடியிருந்து வருகிறேன். வீட்டில் தான் உள்ளேன். 02.07.2021 ம் தேதி நான் 100 நாள் வேலை திட்டத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டு மதியம் 3.00 மணியளவில் வீட்டிற்கு செல்ல நான் முன்னாளும் எனக்கு பின்னால் சரஸ்வதியும், முத்தாம்மாளும் வந்து கொண்டிருந்தார்கள். சாவடிப்பாளையம் முனியப்பன் கோவில் அருகில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் நாங்கள் வந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த ஒரு பைக் வேகமாக வந்து முதலில் சரஸ்வதி மற்றும் முத்தம்மாளின் மீது மோதி விட்டு அந்த நபர் என் கால் மீது மோதி நெஞ்சின் மீது அந்த நபர் விழுந்தார். எனக்கு இதயதுடிப்பு அதிகமாக அடைப்பு ஏற்பட்டது. ஒரு வாரத்தில் நான் அதற்காக அறுவை சிகிச்சை செய்தேன்.

2. சரஸ்வதி மயக்கம் ஆகிவிட்டார். முத்தம்மாள் கீழே விழுந்து எழுந்திருக்க முடியவில்லை. எனக்கு தலையில் ஏற்பட்ட அடியால் வீங்கி விட்டது. லோட்டஸ் மருத்துவமனைக்கு நான் சிகிச்சை அளித்து கொண்டேன். பின்னர் 10 நாட்களில் முத்தம்மாள் இறந்துவிட்டார். எனக்கு உடல்நிலை சரியல்லாமல் நான் மோசமாக இருந்தேன். விபத்து ஏற்படுத்திய இருசக்கர

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.18 18:43:09 +0530

வாகனத்தை ஓட்டிவந்தவரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி இன்று ஆஜரில் இல்லை. போலீஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.18 18:43:13 +0530